## செல்லுமிடங்களிலெல்லாம் மக்களின் உற்சாக வரவேற்பு:

## பாசிச பா.ஜ.க. – அடிமை அ.தி.மு.க.வுக்குத் தோல்வியைத் தர

# தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருக்கிறார்கள்!

### கரூர் கழக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

**கரூர்,ஜூலை.11-**

**கரூர் மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 16 ஆயிரம் பூத் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் பி.டி.ஏ (BDA) எனப்படும் பூத் அளவிலான இணைய முகவர்கள் பங்கேற்ற மாபெரும் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.**

**அப்போது அவர், ``கழகத்தின் கொள்கைகள் - கழக அரசின் சாதனைகளை அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் அவரவர் பூத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மக்களைச் சந்தித்து பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென கூறினார்**

**கரூர் - அரவக்குறிச்சி - கிருஷ்ணராயபுரம் - குளித்தலை தொகுதிகளில் உள்ள 1,055 வாக்குச்சாவடிகளிலும் கழகம் வெற்றி பெற்றது” என்று சொல்லும் அளவிற்கு களத்தில் உழைத்திட, பூத் கமிட்டி நிர்வாகிகளைக் கேட்டு கொண்டார்.**

**கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

### ஓரணியில் தமிழ்நாடு வெல்லட்டும் !

கரூர் மாவட்டத்திற்கு 8-ஆம் தேதி இரவு வருகை தந்தேன். வந்ததிலிருந்து எங்கு சென்றாலும் எழுச்சி, எழுச்சி, எழுச்சிதான். உங்களின் வரவேற்பு அவ்வளவு சிறப்பாக இருந்தது. அதைத் தொடர்ந்து காலையிலிருந்து பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், ஆய்வுக்கூட்டம், இளைஞர் அணி அறிமுகக் கூட்டம், நலத்திட்ட உதவிகள், புதிய பேருந்து நிலையம் திறப்பு விழா என்று பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு இன்றைக்கு இந்த பி.எல்.ஏ.-2, பி.எல்.சி., சி.டி.ஏ. உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தமைக்கு செந்தில் பாலாஜி அவர்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதல் ஆலோசனைக் கூட்டம்

கரூருக்கு எப்போது வந்தாலும் ஒரு புதுவிதமான உற்சாகம் ஏற்பட்டுவிடும். அது இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவரை முதன்முறையாக சட்டப்பேரவைக்கு அனுப்பியது இந்த கரூர் மண். இந்த குளித்தலை தொகுதிதான். அப்படிப்பட்ட கரூர் மண்ணிற்கு வருகை தந்து உணர்ச்சியோடும், நெகிழ்ச்சியோடும் உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

இது ஆலோசனை கூட்டம் என்று, உங்களின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர், மாவட்ட கழகச் செயலாளர் செந்தில் பாலாஜி அவர்கள் சொன்னார். எந்த ஆலோசனைக் கூட்டமாவது இவ்வளவு எழுச்சியாக நடைபெறுமா? கிட்டத்தட்ட ஒரு மாவட்ட மாநாடு போல, இவ்வளவு பெரிதாக, இவ்வளவு எழுச்சியாக, இவ்வளவு பிரமாண்டமாக, இவ்வளவு பேர் பங்கு பெறுகின்ற முதல் ஆலோசனைக் கூட்டம் இதுவாகத்தான் இருக்கும்.

### சிறப்பான நிகழ்ச்சி

இந்த நிகழ்ச்சி மட்டுமல்ல, நேற்று இரவில் இருந்து எல்லா நிகழ்ச்சியையும் கிட்டதட்ட மாநாடு போலத்தான் செந்தில்பாலாஜி அவர்கள் நடத்தி இருக்கிறார். இதில் குறிப்பிட்டு, இன்னொன்று சொல்ல வேண்டும். மூன்று நாட்களுக்கு முன்புதான் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் அனுமதி வாங்கினார். மூன்றே நாட்களில் இப்படி ஒரு சிறப்பாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறார் என்றால் அவரின் உழைப்பு, உழைப்பு, உழைப்புதான்.

இந்த கரூர் மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை. இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏறக்குறைய 1,055 வாக்குச்சாவடிகள் இருக்கிறது. இதில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 15 பேர் கணக்கில் இன்றைக்கு 15,000 பேர் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறீர்கள். இங்கு பேசிய அனைவரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். நீங்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரத்த நாளங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இரத்த ஓட்டம் சீராக இருந்தால்தான் அந்த மனித உடல் சீராக இருக்க முடியும். அதுபோல்தான் பூத் முகவர்களாகிய, பூத் கமிட்டி உறுப்பினர்களாகிய நீங்கள் சீராக, தெளிவாக, மிகவும் கவனமாக இருந்தால்தான் தேர்தலில் நம் இயக்கம் வெற்றி பெற்று நம் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக முடியும். எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்றால் இங்கு வந்திருக்கின்ற உங்களின் கைகளில்தான் இந்தத் தேர்தலின் வெற்றி இருக்கிறது.

### வலிமையான கட்டமைப்பு

மற்ற இயக்கங்கள் எல்லாம் பூத் கமிட்டி அமைப்பதற்கு திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்தில் நம் கழகத்தில் பூத் கமிட்டி மட்டுமல்ல, ஒவ்வொரு பூத் கமிட்டிக்கும் ஒரு டிஜிட்டல் ஏஜெண்டை நியமித்து, தேர்தல் வேலைகளை நாம் மட்டும்தான் நவீனப்படுத்தியிருக்கிறோம். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இருக்கிறோம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே இப்படி ஒரு வலிமையான கட்டமைப்பை உருவாக்கியிருக்கிற முதல் இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதற்குக் காரணம் நம் மகத்தான தலைவர் அவர்கள்தான்.

அடித்தளத்திலிருந்து, தலைமை வரைக்கும் உறுதியான கட்டமைப்பைக் கொண்ட கட்சிதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை, நீங்கள் அறிவீர்கள். கழகத்தின் அடித்தளம் என்பது இங்கு வந்து இருக்கின்ற நம் பூத் கமிட்டி உறுப்பினர்களாகிய நீங்கள்தான். அப்படிப்பட்ட உங்களை 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு சந்திப்பதில் கூடுதல் மகிழ்ச்சி. ஏனென்றால், நீங்கள்தான் அந்த வெற்றியை தலைவர் அவர்களுக்கு தேடித்தரப் போகிறீர்கள்.



### திராவிட மாடல் அரசு

இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சில திட்டங்களை மட்டும், இங்கு குறிப்பிட்டுப் பேச விரும்புகிறேன். நாம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம், நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, கையெழுத்துப் போட்ட முதல் திட்டம் மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்த விடியல் பயணத் திட்டத்தில், இந்த நான்கு வருடங்களில், 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் இந்தத் திட்டத்தின் மிகப் பெரிய வெற்றி. ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் சராசரியாக 900-லிருந்து 1000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தின் மூலம் சேமிக்கிறார்கள்.

இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம், கரூர் மாவட்டத்தில் மட்டும் 11 கோடியே 20 லட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

நம் முதலமைச்சர் அவர்கள் இன்னொரு திட்டத்தை அறிவித்தார். பெண் குழந்தைகள் படிக்க வேண்டும், அதுவும் உயர் கல்வி படிக்க வேண்டும். அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வி படிக்க எந்தக் கல்லூரியில் சென்று சேர்ந்தாலும் சரி, அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

### தமிழ்ப் புதல்வன் திட்டம்

இத்தகைய சிறப்புக்குரிய திட்டம் பெண்களுக்கு மட்டும்தானா எங்களுக்கு இல்லையா என்று ஆண்கள் கேட்டார்கள். உடனே தலைவர் அவர்கள் ஆண்களுக்கும் `தமிழ்ப்புதல்வன்' என்ற திட்டத்தை அறிவித்தார். இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுக்க இன்றைக்கு 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் மாணவ, மாணவிகள் மாதந்தோறும் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் என்றால், அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டம் வந்தபிறகு, இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு பெற்றோர்களும் தைரியமாக, நிம்மதியாக குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். எங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம் முதலமைச்சர் இருக்கிறார், நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது என்று வாழ்த்தி அனுப்புகிறார்கள்.

அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற அனைத்து குழந்தைகளுக்கும் தரமான காலை உணவு வழங்கப்படுகிறது. இதில் தமிழ்நாடு முழுவதும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் 31 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

### மகளிர் உரிமைத் தொகை

இதற்கெல்லாம் மேலாக ஒரு திட்டம் உள்ளது என்றால், தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம் ஒன்று உள்ளது. அதை நிறைவேற்றவே முடியாது என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் நம்மை விமர்சித்தார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, இன்றோடு 22 மாதம் நடைமுறைப்படுத்தி இருக்கிறார். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் சென்று அடைந்திருக்கிறது.

முன்பெல்லாம் ஆட்சியாளர்கள் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், பெண்கள் ஐந்து, ஆறு பேராவது நிச்சயம் குறை சொல்ல வருவார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டு காலத்தில் பல இடங்களில் மக்கள் முறையிட்டிருப்பதைப் பார்த்திருப்போம். ஆனால், இன்று பாருங்கள். இன்றைக்கு நான் சொல்கின்ற இடத்தில் எல்லாம், மகளிர் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, `உங்கள் அப்பாவிடம் நான் நன்றி சொன்னேன் என்று சொல்லுங்கள், மாதம் ஆயிரம் ரூபாய் எங்களுக்கு கொடுத்து விடுகிறார்' என்று மகிழ்ச்சியோடு கூறுகிறார்கள்.

ஒருவர், இருவர் அல்ல. நான்கு பேர் வந்தார்கள் என்றால், நான்கு பேரிடமும் நான் கேட்கிறேன். நான்கு பேரும் சொல்கிறார்கள் எங்களுக்கு உரிமைத்தொகை வந்துவிட்டது என்று. அந்த அளவிற்கு ஒரு சிறப்பான திட்டம். இதில் ஒரு சிலருக்கு விடுபட்டிருக்கிறது என்ற குறைகள் வந்தன. அதற்கு முதலமைச்சர் வருகின்ற 15-ஆம் தேதி சிறப்பு முகாம் அமைக்கச் சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல, விதிமுறைகளை எல்லாம் தளர்த்தச் சொல்லி இருக்கிறார். கண்டிப்பாக தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் இந்தத் திட்டம் சேர வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் ஒரே குறிக்கோள்.

ஒரு கோடியே 15 லட்சம் பயன்பெறுவோர் பட்டியலில் நம் கரூர் மாவட்டத்தில் மட்டும் 1 லட்சத்து 70 ஆயிரம் குடும்பத்தலைவிகள் ஒவ்வொரு மாதமும் பயன்பெற்று வருகிறார்கள். நம் அரசின் இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களின் மூலமாகத்தான், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு 9.69 சதவிகிதத்துடன் இந்தியாவிலேயே முதல் இடத்தில் உயர்ந்திருக்கிறது.

### மண், மொழி, மானம்

நம் அரசு, நம் தலைவர் ஒரு பக்கம் இப்படி நல்ல நல்ல மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறார். ஆனால், மறுபக்கம் ஒன்றிய அரசு நமக்கு சாதகமாக இருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். ஒன்றிய அரசின் சர்வாதிகாரத்தை எதிர்த்து, தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தைக் காப்பாற்றுகிற பணியில், முன்வரிசையில் நிற்பது நம் தலைவரும், நம் அரசும் தான்.

இன்றைக்கு ஒன்றிய அரசு மும்மொழிக் கோள்கை, இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை, நிதி உரிமைப் பறிப்பு என ஏகப்பட்ட சூழ்ச்சிகளை, மறைமுகமாக அல்ல, நேரடியாகவே செய்துகொண்டு இருக்கிறது. இதையெல்லாம் வீழ்த்த வேண்டிய கடமை, நமக்கு இருக்கிறது. அதனால்தான் நம் தலைவர் அவர்கள் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.

### உறுப்பினர் சேர்க்கை

இதன் மூலம் ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினர்களும், உங்களின் பூத்தில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிற்கும் நீங்கள் செல்ல வேண்டும். மக்களைச் சந்தித்துப் பேச வேண்டும். கட்சிப் பாகுபாடு, வேறுபாடு எல்லாம் பார்க்க வேண்டிய அவசியமே கிடையாது. அனைத்து வீடுகளுக்கும் செல்ல வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நான்கு நாட்களுக்கு முன்பு நம் தலைவர் அவர்களே வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று உறுப்பினர்களைச் சேர்த்தார். நான் என்னுடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உறுப்பினர்களைச் சேர்க்க ஒவ்வொரு வீடாக சென்றேன். இந்த முன்னெடுப்பின் மூலம் நீங்கள், ஒவ்வொரு நாளும் எத்தனை பேரைச் சேர்க்கிறீர்கள் என்ற புள்ளி விவரத்தை பூத் வாரியாக தலைவர் அவர்கள் தினமும் கண்காணித்து வருகிறார்.

இந்த நேரத்தில், உங்களுக்கு சிறப்புப் பாராட்டுகளைச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் தலைவர் அவர்களுக்கு அந்தப் பட்டியல் வருகிறது. எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்தத் தொகுதியில் எத்தனை பேரைச் சேர்த்து இருக்கிறார்கள் என்று பட்டியல் வருகிறது. இந்த கரூர் மாவட்டத்திற்கு எனது வாழ்த்துகள். இந்த கரூர் மாவட்டம்தான் தமிழ்நாட்டிலேயே 234 தொகுதிகளிலேயே 2-வது இடத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தலைவர் அவர்கள் என்னை அழைத்து, அந்தப் பட்டியலைக் கொடுத்தார்கள். நானும் பார்த்தேன். இந்த கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளும் அந்தப் பட்டியலில் டாப் -10-ல் இருக்கின்றன.

கரூர் தொகுதி இப்போது இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இன்னும் நான்கு நாட்களில் முதல் இடத்திற்கு வந்துவிடும். அதை நிச்சயம் செந்தில் பாலாஜி அவர்கள் செய்து காட்டிவிடுவார். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. செய்ய முடியாததை எல்லாம் செய்து காட்டுபவர்தான் செந்தில் பாலாஜி. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், கரூர் மட்டுமல்ல மீதுமுள்ள 3 தொகுதிகளிலும் நீங்கள் போட்டி போட வேண்டும். மற்ற மாவட்டங்கள் எல்லாம் மற்ற மாவட்டங்களுடன் போட்டிப் போடுவார்கள். ஆனால், கரூர் மாவட்டம் மட்டும்தான் கரூர் மாவட்டத்துடனேயே போட்டிப்போட்டுக் கொண்டு இருக்கிறது.

இவற்றையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், தினமும் தலைவர் அவர்கள் உங்களின் செயல்பாடுகளை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். பல பேருக்கு தலைவர் அவர்களே, அலைபேசியில் பேசி விவரம் கேட்கிறார். அந்த வீடியோக்களை எல்லாம் பார்த்திருப்பீர்கள். மாவட்டச் செயலாளரிடம் பேசுகிறார்கள், என்னையும் அழைத்து பின் தொடரச்சொல்லி இருக்கிறார்கள். எனவே, தலைவர் அவர்கள் மிகுந்த உன்னிப்போடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த பணியை நீங்கள் அலட்சியமாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அலட்சியமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் மாநில உரிமைகளையும் பாதுகாக்கின்ற ஒரே ஒரு ஆள் யாரென்று பார்த்தால் அது நம் தலைவர் அவர்கள் மட்டும்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி... அவரும் கிளம்பி இருக்கிறார். என்ன சொல்கிறார் தமிழ்நாட்டு உரிமைகளை நான் காப்பாற்றப் போகிறேன் என்று சொல்கிறார். இதைச் சொன்னால், அ.தி.மு.க.காரனே நம்ப மாட்டான், மக்கள் எப்படி நம்புவார்கள்? கடந்த பத்து வருடங்களாக தமிழ்நாட்டின் உரிமைகள் அத்தனையையும் பா.ஜ.க-வுக்கு அடகு வைத்தவர்தான், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி அவர்கள். அப்படிப்பட்ட பழனிசாமி அவர்கள், நம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்.

### கல்லூரி கட்டியது தவறா?

தேர்தல் வந்தவுடன் தமிழ்நாட்டில் உள்ள வீடுகளின் கதவுகளை எல்லாம் தி.மு.க. தட்டுகிறது என்று சொல்கிறார். சொகுசுப் பேருந்தில் பிரச்சாரம் கிளம்பி இருக்கிறார் அவர். நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். எடப்பாடி பழனிசாமி அவர்களே, உங்கள் இடத்தில் பணிவாகச் சொல்லிக் கொள்வது, நாங்கள் உங்களைப்போல டெல்லிக்குத் திருட்டுத்தனமாக சென்று அமித் ஷாவின் வீட்டுக் கதவையோ அல்லது கமலாலயத்தின் கதவையோ தட்டவில்லை. தைரியமாக, தெம்பாக எங்கள் தமிழ்நாட்டு மக்களின் கதவுகளைத்தான் நாங்கள் தட்டிக் கொண்டிருக்கிறோம். உரிமையோடு தட்டுவோம். அதுமட்டுமல்ல, நேற்று ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார் அவர். இந்த அரசு ஒரு மிகப்பெரிய மோசடி செய்துவிட்டதாம். அப்படி என்ன மோசடி செய்துவிட்டோம் என்று கேட்டால், அறநிலையத் துறையின் பணத்தை எடுத்து, கல்வி நிலையங்கள், கல்லூரிகள் கட்டிவிட்டார்கள் என்கிறார்கள். மிகப்பெரிய மோசடி என்று சொல்கிறார். யாராவது இதை ஒப்புக்கொள்வார்களா? கல்லூரி கட்டியது தவறு என்று சொல்கிறார். அறநிலையத்துறை என்றால், வெறும் ஆலயங்கள்தான் கட்ட வேண்டும் என்று சொல்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். நமக்கெல்லாம் இது ஒரு வெட்கக்கேடு, இவரெல்லாம் 4 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அறநிலையத்துறையே இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக்கொண்டு அறநிலையத்துறையைப் பற்றி அக்கறையாகப் பேசுவதுபோல் இவர் நடிக்கிறார்.

### குடமுழுக்கு விழா

இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசின் கீழ், அறநிலையத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த நான்கு வருடத்தில் மட்டும் 2,700 கோயில்களுக்கு நம் ஆட்சியில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப்பெரிய சாதனை. கோயில்கள் மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு உயர்கல்வி சென்று சேர்வதில் ஏதாவது தவறு இருக்கிறதா? ஆன்மிகப் பணி எப்படி ஒரு அறப் பணியோ அதைவிட ஒரு மிகச் சிறந்த அறப்பணி என்றால், நிச்சயமாக குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய கல்வி பணிதான். நம் வீட்டு குழந்தைகளின் கல்விக்கு எதிராகப் பேசியிருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு வருகின்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாட்டு மாணவர்களும் சரியான பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு எடப்பாடி பழனிசாமியிடம், ``உங்கள் அணி வென்றால் கூட்டணி ஆட்சிதான் அமையும் என்று சொல்கிறார்களே?” என பத்திரிகையாளர்கள் கேட்டனர். அதற்கு அவர், ``நான் ஒன்றும் சொல்வதற்கு எதுவும் இல்லை. எல்லாமே டெல்லியில் முடிவெடுப்பார்கள்” என்கிறார். தான் ஒரு டெல்லி அடிமை என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

### தமிழ்நாட்டு மக்கள் தயார்

இதுவரைக்கும் காலில் விழுந்து பதவிகளைப் பெற்ற எடப்பாடி பழனிசாமி, இப்பொழுது பதவிக்காக டெல்லிக்கு காவடி தூக்கவும் தயங்க மாட்டோம் என்று முடிவெடுத்துவிட்டார். ஆகவே, ஒரே ஒரு விஷயத்தை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அடிமை அ.தி.மு.க.-வும் பாசிச பா.ஜ.க.-வும் போட்டியிடுகின்ற அனைத்து தொகுதிகளிலும் வரலாறு காணாத அளவிற்கு தோல்வியை கொடுப்பதற்கு தமிழ்நாட்டு மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் உரிமைகளை, வரலாற்றை, பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றால் அ.தி.மு.க. கூட்டணி கண்டிப்பாகத் தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்கு பூத் கமிட்டி பொறுப்பாளர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் படைவீரர்களாக அடுத்த எட்டு மாதங்கள் செயல்பட வேண்டும். உங்களின் பூத் இருக்கின்ற பகுதியை கழகத்தின் இரும்புக் கோட்டையாக மாற்றிக்காட்ட வேண்டும். அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும், நீங்கள் தினமும் உங்கள் பூத்துக்கு கீழ் வருகின்ற குடும்பங்களை தினமும் சந்திக்க வேண்டும். அவர்களிடம் தினமும் நெருங்கிய தொடர்பில் இருக்க வேண்டும். அரசின் திட்டங்களை விளக்க வேண்டும். உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டோம் என்று நின்றுவிடக் கூடாது. அதற்கு பிறகும் உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய வாக்காளர்களைத் தொடர்ந்து பின்தொடர வேண்டும். களத்தில் மட்டுமல்லாமல், சமூக வலைதளத்திலும் நீங்கள் ஆக்டிவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு என்று தனியாக ஒரு வாட்ஸ் அப் குரூப் வைத்துக்கொண்டு, கழக சாதனைகளைப் பிரச்சாரம் செய்து உங்களின் பணிகளை அதில் பதிவேற்றுங்கள். மக்களுக்குத் தேவையானதைச் செய்து கொடுங்கள். உங்களால் முடியவில்லை என்றால் அமைச்சர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லுங்கள். வாக்காளர் பட்டியலை அடிக்கடி சரிபார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இப்போதிலிருந்தே அந்தப் பணிகளை நீங்கள் தொடங்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

### கழக ஆட்சி அமைப்போம்

உங்களுக்கு தேவையான அத்தனை உதவிகளையும் செய்வதற்கு உங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர் செந்தில் பாலாஜி அவர்கள் என்றைக்கும் தயாராக இருப்பார். வருகின்ற தேர்தலில் பத்து தோல்வி பழனிசாமியை 11 தோல்வி பழனிசாமியாக நீங்கள் மாற்றிக்காட்ட வேண்டும். 200-க்கும் அதிகமான தொகுதிகளை நிச்சயம் வென்று காட்டுவோம் என்று தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாம் அனைவரும் ஒன்றாகக் களத்தில் இறங்கி களப்பணியைச் செய்தோம் என்றால், 200-க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வென்றுகாட்டி, மீண்டும் கழக ஆட்சியை அமைப்போம்.

வாக்காளர் முகவர்களாக பூத் ஏஜெண்ட் கமிட்டிகளில் இருக்கக்கூடிய 16 பேர்களும் பல்வேறு அணிகளில் இருப்பீர்கள். இளைஞர் அணியில் இருந்து ஒருவர், மகளிர் அணியிலிருந்து ஒருவர், தகவல் தொழில்நுட்ப அணியில் இருந்து ஒருவர் என பலரும் இருப்பீர்கள். நாங்கள் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம், நமக்குள் சில போட்டி பொறாமைகள் இருக்கலாம். நான் இளைஞர் அணி, நீ மகளிர் அணி, நீ தகவல் தொழில்நுட்ப அணி என்று இருக்கலாம். ஆனால், அடுத்த எட்டு மாதம் அந்தக் கவலை எல்லாம் மறந்துவிட வேண்டும். நாம் எல்லாம் ஒரே அணி, அது கலைஞர் வழியில் வந்த நம் தலைவர் அணி என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் கண்டிப்பாக வெற்றி பெற்று காட்ட வேண்டும். அதற்கு ஒரு தொடக்கமாக கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை தொகுதிகளில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலேயே தேர்தலுக்கு முன்பாக நாம் நடத்தும், முதல் பி.எல்.சி. கூட்டம் இதுதான். இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான ஆலோசனை நிகழ்ச்சியை இன்றைக்கு தமிழ்நாட்டில் முதன்முறையாக ஏற்பாடு செய்திருக்கிறார் நம் செந்தில் பாலாஜி அவர்கள். இதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொண்டு, அனைத்து மாவட்டங்களிலும், தமிழ்நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும், அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக செந்தில் பாலாஜி அவர்கள் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான செந்தில் பாலாஜி, அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ராஜேஷ்குமார், கே.எஸ்.மூர்த்தி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளருமான கே.இ.பிரகாஷ், மாநகரச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம், இளங்கோ, சிவகாமசுந்தரி, மாநகர மேயர் கவிதா கணேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சக்திவேல், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கராத்தே பூபதி, தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் விமலா தேவி, திலீபன், பகுதிக் கழகச் செயலாளரும், துணை மேயருமான தாரணி சரவணன், ப ராஜேந்திரன், ரமேஷ் அம்பிகாபதி, மாமன்ற உறுப்பினர் கயல்விழி அம்பிகாபதி மற்றும் 23 சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.